Registered as a Newspaper in Ceylon ☆ விலை சதம்10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (8-9-65) இதழ் 208

விசுவாவசு ஆவணி 23 ஜ: அவ் பிறை 11 புதன்கிழமை

தரத்திலும் மணத்திலும் சிறந்தது
காமதேனு கோப்பியே
தயாரிப்பாளர்: பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12 போன்: 5830

## புகையிரத விபத்து

கண்டி, செவ்

கண்டி—இறம்புக்கனை புகையிரதம் நேற்றுக் காலை பாதையைவிட்டு விலகியது. பலான என்ற இடத்தில் புகையிரதம் பாதையை விட்டுவிலகியதால் சில பிரயாணிகள் சிறு காயங்களுக்குள்ளானார்கள். இவ்விபத்தால் கொழும்பிலிருந்து கண்டி, பதுளை ஆகிய இடங்களுக்குப் போகவேண்டியவர்கள் இறம்புக்கனைக்கும் கடுகண்ணாவைக்கும் இடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யவேண்டிய கஷ்டநிலை ஏற்பட்டது.

# பொதுமக்கள்மீது பாக். குண்டுவீச்சு

## ஏராளமான பாகிஸ்தான் விமானங்கள் சுடப்பட்டன

## கல்கத்தாவுக்கருகில் விமான தாக்குதல் நடத்த முயற்சி

### ராவல்பிண்டி தளத்தில் இந்தியா குண்டுவீச்சு

புதுடில்லி, செப். 7

இந்திய விமானப்படை விமானங்கள் பாகிஸதான் தலைநகர் ராவல்பிண்டிக் கருகிலுள்ள பெரிய விமானத்தளமான சக்லாலாவையும், மேற்கு பஞ்சாபிலுள்ள சகோடா விமானத்தளத்தையும் இன்று தாக்கியதாகவும், அதேசமயம் பாகிஸதானிய விமானங்கள் கல்கத்தாவுக் கருகிலுள்ள விமானத் தளம் ஒன்றைத் தாக்க முயற்சிக்கையில் விரட்டியடிக்கப் பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

**பாலம் நாசம்**

லாகூர் பகுதியில் பாகிஸ்தானியரின் பலத்த எதிர்ப்புக்கிடையிலும் இந்தியத் துருப்புக்கள் திட்டமிட்டபடி முன்னேறி வருவதாக அறிவிக்கப்பட்டது.

இன்று பேராபாபானக் பாலத்தை பாகிஸ்தானியர் அழித்ததாயும், இவ்விபத்தில் 7 பாகிஸ்தான் டாங்கிகள் நாசம் செய்யப்பட்டதென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

இந்திய விமானங்கள் ஏராளமான தடவைகள் பாகிஸ்தான் பிரதேசத்தில் பறந்து சென்று குண்டுகளைப் பொழிந்தன.

**11 விமானங்கள் அழிந்தன**

நேற்று 9 பாகிஸ்தானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 2 டாங்கிகள் அழிக்கப்பட்டன. 2 விமானங்கள் சேதமாக்கப்பட்டன. 16 பாகிஸ்தானிய டாங்கிகளும் 14 பீரங்கிகளும், அழிக்கப்பட்டன. ஏராளமான டாங்கிகள் முடமாக்கப்பட்டன. 40 வாகனங்கள் அழிக்கப்பட்டன.

**பல விமானங்கள் நாசம்**

ஒவ்வொன்றும் 4 என்ஜின்கள் கொண்ட இரு அமெரிக்க போக்குவரத்து விமானங்கள், 6 ஸெப்ரி ஜெட் விமானங்கள், ஒரு பி 57 விமானம், இரண்டு எப் 104 சண்டை விமானங்கள்ஆகியனவும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

**பொது மக்கள்மீது குண்டு வீச்சு**

பாகிஸ்தானிய விமானங்கள் இன்று அமிர்தசரஸில் பொது மக்கள் மீது குண்டுகளை வீசின என்றும், கல்கத்தாவுக்கருகிலுள்ள கலைக்கோடி தளத்தைத் தாக்க முயன்ற போது விரட்டப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

**இந்தியாவுக்கு 8 விமானங்கள் சேதம்**

இந்தியத்தரப்பில் 8 விமானங்கள் அழிக்கப்பட்டன என்றும், வேறு சில விமானங்களுக்கு சேதம் ஏற்பட்டதென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

**பிடிபட்டனர்**

ஜல்லந்தர், பதன்கோட் ஆகிய இடங்களில் பாகிஸ்தான் பாரசூட் வீரர்கள் பலர் இன்று பிடிபட்டார்கள்.

பூஞ்ச் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் முன்னேறி மேலும் 2 பாகிஸ்தான் நிலைகளைப் பிடித்தன. 45 பாகிஸ்தானியரின் சடலங்கள் இங்கு காணப்பட்டன.

சாம் பகுதியில் அக்னூர் நோக்கி முன்னேற பாகிஸ்தானியர் எவ்வளவோ முயன்றும் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன.

டிட்வால் பகுதியில் பாகிஸ்தான் எதிர்த் தாக்குதல் முறியடிக்கப்பட்டதுடன் 1 அதிகாரியும் 4 இதர இராணுவத்தினரும் பிடிபட்டனர். ஹாஜிபீர் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் மேலும் முன்னேறி மற்றோர் முக்கிய பாகிஸ்தான் நிலை ஒன்றைப் பிடித்தன.

கடந்த 24 மணி நேரமாக யுத்தநிறுத்த எல்லைக்கோடு நெடுகிலும் இருசாராரும் கைகலந்து கொள்கிறார்கள்.

**பொய்ப் பிரசாரம்**

பாகிஸ்தான், பொதுமக்கள்மீது குண்டுவீசும் அதே சமயம் இந்திய விமானங்கள் கராச்சி, ராவல்பிண்டி, டாக்கா, சிட்டகாங் ஆகிய நகரங்களில் பொதுமக்கள் மீது குண்டுவீசுவதாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருவதாகக் கூறப்பட்டது. இன்று 16 பேட்டன் டாங்கிகளையும், ஷெர்மான் டாங்கிகளையும், 14 பீரங்கிகளையும் இந்தியத் துருப்புக்கள் அழித்தன.

## பக்தூன் தேசியவாதிகள் தீவிர தாக்குதல்

### 18 பாகிஸ்தானியர் பலி

காபுல், செப். 7

பக்தூனிஸ்தான் தேசியவாதிகள் இப்போது தங்கள் நடவடிக்கையைத் தீவிரப் படுத்தியிருப்பதாய் காபுல் ரேடியோ அறிவித்தது.

பாகிஸ்தான் ராணுவ நிலைகளை அவர்கள் தாக்கியதால் 15 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர் என்றும், பெருந்தொகையானோர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. மற்றோரிடத்தில் மூன்று பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

பாகிஸ்தானியர்கள் சாதனங்களைப் போட்டுவிட்டு ஓடியதாயும்காபுல்ரேடியோ அறிவித்தது.

காயமடைந்த 17 பாகிஸ்தானியர்களை எடுத்துச் செல்ல பல ஜெட்விமானங்களை பாகிஸ்தான் அனுப்பியதென்றும். ஆனால் இம் முயற்சி முறியடிக்கப்பட்டதென்றும்அறிவிக்கப்பட்டது

## இந்திய, பாகிஸ்தான் நகரங்களில் இருட்டடிப்பு!

புதுடில்லி, செப். 7

கல்கத்தா, பம்பாய், ஹைதராபாத் உட்பட பல இந்திய நகரங்களில் சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. கல்கத்தாவிலும் சுற்றுப்புறத் தொழிற்சாலைப் பகுதிகளிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. பம்பாய் மாநகரம் இருட்டடிப்பு செய்யப்பட வேண்டும் என பொலிஸ் கமிஷனர் உத்தரவிட்டிருக்கிறார். ஹைதராபாத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன. ஊர்வலங்கள், கூட்டங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன.

ஃ ஃ ஃ

பாகிஸ்தான் இப்போது யுத்தத்தை கிழக்குப் பகுதிக்கும் விஸ்தரிக்க முயற்சித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகள் கராச்சிக்கான தங்கள் விமானசேவையை நிறுத்தியிருக்கின்றன. பாகிஸ்தான் நகரங்களிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

பாகிஸ்தான் பாரசூட் வீரர்களை பிடிக்க தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் இவ் விஷயத்தில் எச்சரிக்கையுடனிருக்குமாறு கோரப்பட்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

இந்த அலங்கோலங்களுக்கு மத்தியில் ஐ நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் இன்றிரவு நியூயோர்க்கிலிருந்து இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் புறப்படுகிறார்.

## கண்ணாடிப் பாத்திரங்கள் ஏற்றுமதி

பேர்லின், செப். 7

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்காகக் கண்ணாடிப் பாத்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் 70 நாடுகளுக்குத் தனது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது. கெய்ரோவில் ''கிராண்ட் ஒட்டலுக்கும்'' லக்சோரில் ''வின்டர் அரண்மனைக்கும்'' அவசியமான எல்லாக் கண்ணாடிப் பாத்திரங்களையும் இந்த நிறுவனமே அனுப்பவிடுக்கிறது. ஐக்கிய அரபுக் குடியரசு உட்பட அரபு நாடுகள், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, டென்மார்க், சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுக்கு இங்கிருந்து பல்வேறு விதமான கண்ணாடிப் பாத்திரங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## வர்த்தகச் சந்தையில் 60 நாடுகள்

பேர்லின், செப். 7

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் லயிப்சிக் நகரில் செப்டம்பர் 5 - 12-ம் திகதிகளில் நடைபெறும் சர்வதேச வர்த்தகச் சந்தையில் 60 நாடுகளைச் சேர்ந்த 6,500 நிறுவனங்கள் தத்தம் பொருட்களைக் காட்சிக்கு வைக்கும். 80 நாடுகளிலிருந்து பார்வையாளர்கள் சந்தைக்கு வருவார்களென்றும் சோஷலிசம் அல்லாத நாடுகளிலிருந்து சுமார் 35,000 பேர்கள் விஜயம் செய்வார்களென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. வெளி நாடுகளில் இந்தியா தான் அதிகமான பொருட்களை காட்சிக்கு வைக்க முன்வந்துள்ளது. 6 அரபுநாடுகள் சந்தையில் பங்கு பற்றும்.

## துப்பாக்கிகள் திருப்பித் தரப்படும்

கொழும்பு, திங்கள்

அவசரகாலநிலையின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட துப்பாக்கிகள் மீண்டும் அவர்களிடம்திருப்பித்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதவர்க்கம் இல்லாவிட்டால் அழகு இல்லை; ஆனால் மனிதவர்க்கமே இல்லாதுபோனாலும் உண்மை இருக்கும். உண்மை மனித சம்பந்தமற்ற சுத்த சுயம்புவான தத்துவம். —ஐன்ஸ்டின்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 23 உ (8-9-65)


## அபிவிருத்தி திட்டமும் வேலைவாய்ப்பும்

அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி வாக்குறுதியளிக்கப்பட்டுவருகிறது. அபிவிருத்தித்திட்டங்களுக்கென பிறநாடுகளிலிருந்து மூலப் பொருள்களும் இயந்திரசாதனங்களும் வாங்குவதற்கு முயற்சி செய்யப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது. அபிவிருத்தித்திட்டங்களுக்கென இயந்திரங்களும் உற்பத்திப்பொருள்களும் வாங்குவதற்கென மேலும் பத்துக் கோடி ரூபாய் செலவு செய்வதற்கு ஒழுங்கு செய்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அபிவிருத்தித் திட்டங்கள் சரியான முறையில் அமுல் நடத்தி வெற்றிகரமாக நிறைவேறுமென எதிர்பார்ப்போம்.

அபிவிருத்தித்திட்டங்கள், உள்நாட்டில் பொருள்களை உற்பத்தி செய்யவும் அவற்றை விற்பனை செய்யவும் அதன் மூலம் உள்நாட்டுக்குத் தேவையான பொருள்களுக்காக வெளிநாடு செல்லும் பெருந்தொகையான பணத்தை மிச்சப்படுத்தவும் உதவவேண்டும். எனவே அபிவிருத்தித்திட்டங்கள் உள்நாட்டில் சுயதேவைப் பூர்த்தியை ஏற்படுத்துவதுடன் அந்நிய செலாவணியையும்மிச்சப்படுத்துவதாகும்.

ஆனால் எமது நாட்டில் பொதுமக்கள்திருப்தியாக வாழ்வதற்கு உள்நாட்டில் உற்பத்தி அதிகரித்து பொருள்கள் மலிவாகக் கிடைத்தால் மட்டும் போதாது. வருஷா வருஷம் பரீட்சையில் சித்தியடைந்து வேலைவாய்ப்பின்றி அலைந்துதிரியும் இளம் ஆண்களும், பெண்களும் வேலைவாய்ப்புப் பெற்று திருப்தியுடன் வாழவேண்டும். அரசாங்கம் திட்டமிடும் அபிவிருத்தித்திட்டங்களில் வேலையற்றிருக்கும்படித்த இளைஞர்கள் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்?

வேலையில்லாத் திண்டாட்டம் எங்கள் நாட்டில் பெரிய பிரச்னையாகவும் நிவர்த்திசெய்ய வேண்டிய அவசரப் பிரச்னையாகவும் இருந்து வருகிறது. பெரிய இயந்திரங்களை உபயோகித்து உற்பத்தியை அதிகரிக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பளிக்கமாட்டாது. அபிவிருத்தித் திட்டங்களுடன் வேலையில்லாத் திண்டாட்டத்துக்குத் தீர்வு காணும் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களில் வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காணக் கூடிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

விவசாயத் திட்டங்களும் நவீன முறையில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் குடிசைக்கைத் தொழில் திட்டங்களும், கல்வி கற்று வேலையில்லாதிருக்கும் இளைஞர்களுக்கு தகுந்த வேலை வாய்ப்பளிக்கும் முறையில் தயாரிக்கப்பட்டு விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்திட்டங்கள் உடனடியாக வகுத்தால் செலவு அதிகரிக்குமென அரசாங்கம் பின்வாங்குவதற்குநியாயமில்லை. அபிவிருத்தித் திட்டங்களினாலும் மற்றும் பொருளாதாரத் திட்டங்களினாலும் பண வருவாயை அதிகரித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்க முடியும்.

அபிவிருத்தித் திட்டங்களையும் அதனுடன்வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கக்கூடிய திட்டங்களையும் எவ்வளவு விரைவில் தயாரித்து அவற்றைச் சமர்ப்பித்து அமுல் நடத்த முடியுமோ அவ்வளவுக்கு வேலையின்றியிருக்கும் பெருந் தொகையான இளைஞரின் ஒத்துழைப்பையும் தேசாபிமானத்தையும் அரசாங்கம்பெற முடியும். வருங்கால சந்ததியினரான இளைஞர்களுக்கு வாழ்க்கை வசதியாக அமைய அரசாங்கம் வழிவகுப்பதுமாகும். வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கக்கூடிய முறையில் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி அவற்றை நிறைவேற்றுவதன்மூலமே நாட்டில் மக்கள் திருப்தியுடன் வாழ முடியும்; உற்பத்தியும் அதிகரிக்கும்; நாடும் செழிப்புடன் முன்னேறும். இந்தச் சந்தர்ப்பத்துக்கேற்ற முறையில் அரசாங்கம் செயலாற்றமுன் வருமா?

## மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் செப்டம்பர்மாதம் 10-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், செவ்வாய்

சண்டிருப்பாய் நவனியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. தொடர்ந்து பன்னிரண்டு தினங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். நேற்றைய தினம் புதிதாக வார்க்கப்பட்ட விநாயகர், அம்பாள் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

## சமயப்பிரசாரக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

காரைநகர் சைவமகா சபை ஆதரவில் வருகிற வெள்ளிக்கிழமை மாலையில் சைவபரிபாலன சபை மண்டபத்தில் நிறைமதி நாட்சமயப் பிரசாரக் கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது. வட்டுக்கோட்டை வட்டார வித்தியாதரிசி திரு. ச. சபாபதி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் வித்துவான் திரு. நா. சிவபாதசுந்தரம் 'தருமம்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

# வார இறுதியில் தமிழ்சாகித்திய விழா

## வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை சாகித்தியமண்டலத்தின் ஆதரவில் தமிழ் சாகித்தியவிழா வருகிற சனிக்கிழமை வண்ணை வைத்தீஸ்வரா மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இலங்கை சாகித்திய மண்டலத்தின் உபதலைவர் கலாநிதி ஆனந்த டபிள்யூ. பி. குருகே விழாவைத் தொடக்கிவைப்பார். விழாவின் முற்பகல் நிகழ்ச்சிகள் தேசிய மொழித்துறை உதவி ஆணையாளர் திரு. அ. வி. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும்.

வடமாநில உதவிவித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் வரவேற்புரை நிகழ்த்துவார். கலாநிதி ஆனந்த டபிள்யூ.பி.குருகே தொடக்கவுரை நிகழ்த்துவார். இதனையடுத்து 'வாழ்வும் இலக்கியமும்' என்ற கருத்தரங்கு இடம்பெறும். இக் கருத்தரங்கில் வித்துவான் பொன். முத்துக்குமாரன், பண்டிதை தங்கம்மா, அப்பாக்குட்டி, கவிஞர் மு. செல்லையா, திரு. சி. சரவணபவன் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

விழாவின் பிற்பகல் நிகழ்ச்சிகள் திரு. ஏ. எம். ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெறும். வைத்தீஸ்வரவித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் வரவேற்புரைநிகழ்த்துவார்.

சாகித்தியமண்டலப் பரிசு பெற்றவர்களுக்கு பண்டிதர் க. நாகலிங்கம், வித்துவான் க. கி. நடராசன், திரு. சி. உ. சோமசேகரம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்குவார்கள்.

திரு. தி.க. சீதாராமசாஸ்திரிகள், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் முறையே 'காவியஅமைப்பு', 'மக்கள் இலக்கியம்', 'இலக்கியமும் சமுதாயமும்' என்னும் பொருள்கள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்துவர்.

பண்டிதர் த. கிருஷ்ண பிள்ளையின் நன்றியுரையுடன் விழா முடிவடையும்.

## கிறிஸ்தவ சபையும் சோஷலிசமும்

பெர்லின், செப். 7

''கிறிஸ்தவசபை சோஷலிசத்துக்கு எதிரானதல்ல. மக்களுக்காகவே இச்சபை இருக்கிறது. சோஷலிஸ்டுகளான கிறிஸ்தவர்கள் சோஷலிச முறையின் கீழ் என்றும் கிறிஸ்தவர்களாகவே இருக்க விரும்புகின்றனர்'' என்று ஜெர்மன்ஜனநாயகக் குடியரசின் மேற்றிராணியார் வண. டாக்டர்மொரிட்ஸ்மிட்ஸென்ஷிம்இங்கு கூறினார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

இந்த மாதிரிக் கண்டக்டர்களை 'நோட்'பண்ணி வைத்திருப்பார்கள். 'இந்தாளிடம் காசு போனால் திரும்பி வராது' என்று மற்றப் பிரயாணிகளுக்கு எச்சரிக்கை கூறுவார்கள்.

காடையர்கள் கடைக்காரரிடம் கப்பம் கேட்பது போல பிரயாணிகளிடம் பணம் பிடுங்குவது தங்களுக்கு அளிக்கப்பட்ட ஓர் உரிமை என்று சில கண்டக்டர்கள் நினைக்கிறார்கள்.

கண்டக்டர்களில் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள். இது அவரவர் பிறப்புவாசி. களவெடுக்க நினைப்பவன் எத்தனை கட்டுப்பாடு இருந்தாலும் களவெடுக்கத்தான் எத்தனிப்பான்.

— வழிப்போக்கன்

## சிரமதான முறையில் தடுப்பு மருந்து

பளை, செவ்வாய்

இலங்கையின் சகல பாகங்களிலும் தற்போது பரவிவரும் இளம்பிள்ளைவாத நோயைத் தடுக்குமுகமாகப் பச்சிலைப்பளிக்கு பளைச் சுகாதார பரிசோதகர் திரு. எஸ். வீரசிங்கம் தலைமையில் சாவகச்சேரி வைத்திய அதிகாரி, சாவகச்சேரி வைத்திய அதிகாரியின் கீழ்க் கடமையாற்றும் ஆறு சுகாதார பரிசோதகர்கள், பத்து மருத்துவதாதிமார்கள், விகிதர், இரு சேவையாளர் உட்பட சுமார் 20 பேர் அடங்கிய கோஷ்டி சிரமதான இயக்க முறையில் இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்தை விநியோகம் செய்தது.

இச்சிரமதான இயக்கத்தில் பச்சிலைப்பள்ளிப் பகுதிக் காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை, சாவகச்சேரி வைத்திய அதிகாரி திருமதி எம். அருளம்பலம், கிராமாபிவிருத்தி அதிகாரி திரு. எஸ். பிரடெரிக், பளை வைத்திய அதிகாரி திரு. தா. நாகரத்தினம் ஆகியோர் பிரதம பொறுப்பாளர்களாகக் கடமையாற்றினர்.

## இலங்கைக் கோஷ்டிக்கு வரவேற்பு

பெர்லின், செப். 7

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு விஜயம் செய்துள்ள தெகியோவிட்ட எம். பி. திரு. தனபால வீரசேகரா, இலங்கை-ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நண்பர்கள் சங்கத்தலைவர் திரு. ஜயாபத்திரானா, வண. ஆனந்ததேரோ ஆகியோர்களை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவிப் பிரதமமந்திரி திரு. மாக்ஸ் செப்ரின் இங்கு வரவேற்றார். அவர் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் கிறிஸ்தவர்கள் சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் ஆற்றும் பணியை அவர்களுக்கு விளக்கிக் கூறினார். திரு. ஜயாபத்திரானா பேசுகையில், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தனது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்துள்ளதென்றும் மேற்கு ஜெர்மன் ஒரு கெடிபிடிப் போர்த்தளமாக மாறியிருப்பதாகத் தெரிகிறதென்றும் கூறினார்.

## குடிமதிப்பு பற்றிய ஆராய்ச்சி

பெர்லின், செப். 7

பல்கேரியா, செக்கோஸ்லாவகியா, கியூபா, ஹங்கேரி, யூகோஸ்லாவியா, போலந்து, சோவியத் யூனியன், ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளின் நிபுணர்கள் இவ்வருடத்தில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் நடைபெற்ற குடிமதிப்பு, சனத்தொகை ஆகியவை பற்றிய விபரங்களைக் கண்டறிவதற்காகப் பெர்லினுக்கு விஜயம் செய்தார்கள். அவர்கள் லயிப்சிக் நகரில் உள்ள மத்திய புள்ளிவிபர சபையின் அலுவலகத்திற்குச் சென்று குடிமதிப்பு விபரங்களை ஆராய்வதில் ஏற்பட்ட அனுபவங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டனர். அங்கு குடிமதிப்பு அட்டைகளை முறைப்படி வரிசைப்படுத்தித்தொகுப்பதில் 4,500 சிப்பந்திகள் ஈடுபட்டுள்ளனர்.

## நாட்டிலும் நகரிலும்

நேற்று முன்தினம் (திங்கள்) இ. போ. ச. பஸ் ஒன்றில் ஏறினேன். நான் செல்லவேண்டிய இடத்துக்கு கட்டணம் இருபத்தைந்து சதம். மூன்று பத்து சதங்களை கண்டக்டரிடம் கொடுத்துவிட்டு மிச்சக் காசைக் கேட்டேன். அவர் 'அதெல்லாம் தரலாம், ஏறு' என்றார். கண்டக்டர்களிடம் எந்த நேரமும் சில்லறைக் காசு இருக்காதுதான். அதுவுமன்றி எனக்குப் பின்னால் பஸ்ஸில் ஏறுவதற்கு இன்னும் பலர் காத்துக்கொண்டு நின்றார்கள். இதுகளை யோசித்து நான் வண்டிக்குள் ஏறிவிட்டேன். பஸ்ஸை விட்டு நான் இறங்கியபோது கண்டக்டர் அடிவண்டிக்குள் எங்கேயோ நின்றுகொண்டார். சன நெருக்கடிக்குள் இந்த ஐந்து சதத்திற்காக ஏன் அவரைக் கூப்பிட்டு பஸ்ஸைத் தாமதப்படுத்தவேண்டும் என்று நினைத்து இறங்கிப் போய்விட்டேன்.

என்னுடைய அலுவல்முடிந்து திரும்பியபோது நல்லவேளையாக அதே பஸ்ஸில் அதே கண்டக்டரைச் சந்தித்தேன். இம்முறை அவர் டிக்கட்டை நீட்டியபோது போனதடவை எனக்குஐந்து சதம் வருமதி என்பதை, என்னுடைய மானமும் அவருடைய மானமும் பறிபோகாதபடிக்கு, இரகசியமாக நினைவூட்டினேன், அவர் ஒன்றுமே பேசவில்லை. கேட்காதவர்போல போயேவிட்டார்.

என்னுடன் பிரயாணம் செய்த ஒரு பெண்மணிக்கும் இந்தக் கதி ஏற்பட்டிருக்க வேண்டும். பெண்களிடம் அதுவும் யாழ்ப்பாணத்துப் பெண்களிடம், இந்தப்பயறு அவியாது என்பதை அந்தக் கண்டக்டர் அறியவில்லையோ அல்லது அறிந்தும் இந்தத்தொழிலை நாள் பூராவும் செய்துவந்தபடியால் அவருடைய உணர்ச்சிகள் யாவும் மரத்துப்போய்விட்டனவோ தெரியவில்லை. அந்த அம்மாள் பஸ்ஸுக்குள் எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு 'மிச்சக் காசு, மிச்சக்காசு' என்று கத்தினார். 'எணேய், கத்தாமலிரெணை, உன்ரை காசை இஞ்சை ஒருத்தரும் வீட்டை கொண்டு போகேல்லை' என்று ஒரு தரம் அதட்டிப்பார்த்தார், அது நடக்கவில்லை. மிகவும் வேண்டா வெறுப்பாக மிச்சக்காசை ஒப்படைத்துவிட்டார்.

யாழ்ப்பாணத்து பஸ் கண்டக்டர்கள் மட்டுமல்ல இலங்கையின் மற்றப் பகுதிகளிலும் சிலர் பிரயாணிகளை ஏமாற்றிப் பிழைப்பதுண்டு. பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தால் ஐந்து ரூபாய்க்கு சில்லறை கொடுப்பவர்களும் இருக்கிறார்கள், செல்லாக்காசைக் கட்டியடிப்பவர்களும் இருக்கிறார்கள். பஸ் நிற்கவேண்டிய இடத்தை அடைந்ததும் மீதிப் பணம் கொடுக்காமல் ஒடி ஒழிந்து கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

இதற்கு மாறாகச் சில பஸ் கண்டக்டர்கள் மிகவும் நேர்மையாகவும் நடந்துகொள்ளுகிறார்கள். யார் யாருக்கு மீதிப் பணம் கொடுக்க வேண்டுமோ அவர்களை எல்லாம் நினைவில் வைத்துத் தாங்களாகவே தேடிச் சென்று கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுவார்கள்.

பாவம், ஏழைப் பிரயாணிகளை ஏமாற்றி, ஐந்து சதம் பத்துச் சதமாக வசூல் பண்ணி வயிற்றை வளர்க்கும் கண்டக்டர்களை என்ன செய்வது? தினமும் பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் ஈனத் தொழில் செய்யும்

(3-ம்கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# '22 இந்திய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன'

## இந்திய துருப்புக்களின் முன்னேற்றம் தடுக்கப்பட்டதாய் பாகிஸ்தான் அறிவிப்பு

### "சென்டோ" உதவியுடன் பாகிஸ்தான் போராடும்" — பூட்டோ

ராவல்பிண்டி, செப்.7

**பாகிஸ்தான் விமானப்படை விமானங்கள் நேற்று பஞ்சாபில் நடைபெற்ற விமானச் சண்டையின் போது 22 இந்திய விமானங்களை நாசப்படுத்தியதாய் பாகிஸ்தான் வானொலி அறிவித்தது. தங்களுக்கு 2 விமானங்கள் நஷ்டம் எனவும் அது அறிவித்திருக்கிறது.**

இந்திய விமானத் தாக்குதல்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு வருவதாயும் அதுகூறியது.

பதன் கோப்பில் இந்திய விமானப்படையைச் சேர்ந்த 9 ரஷ்ய மிக் ஜெட் விமானங்களும் 8 ஹண்டர் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டு இதில் அடங்குமென அது மேலும் கூறியது.

இந்திய கான்பரா விமானங்கள் இன்று பாகிஸ்தான் பகுதியில் தாக்குதல் நடத்தியதென்றும், ஆனால் அவை வெற்றிகரமாக விரட்டியடிக்கப்பட்டன என்றும் அது மேலும் கூறியது.

### நிறுத்தப்பட்டது

லாகூர் பகுதியில் இந்தியாவின் மும்முனைத் தாக்குதல் நிறுத்தப்பட்டதென்றும், இந்தியத் துருப்புக்களுக்கு பலத்த சேதம்விளைவிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. இந்தியா பிடித்த சில சிப்பாய்கள் மீட்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.

நேற்று பிற்பகல் 200 இந்திய வீரர்களின் சடலங்கள் காணப்பட்டன. ஏராளமான இந்தியர் சிறைபிடிக்கப்பட்டார்கள் என்றும்அது கூறியது.

இதற்கிடையில் "காஷ்மீர் குரல்" வானொலி ஸ்ரீநகருக்கருகில் விடுதலை வீரர்கள் 2 பாலங்களை தகர்த்ததாக குறிப்பிட்டது.

### பூட்டோ

வெளிநாட்டு மந்திரி திரு பூட்டோ நேற்று நள்ளிரவு விடுத்த அறிக்கையொன்றில் பாகிஸ்தான் தனியாகமட்டுமன்றி, "சென்டோ" வின் ஒத்துழைப்புடன் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் எனக் கூறியிருக்கிறார். பிரிட்டன், துருக்கி, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் இதில் இருக்கின்றன. அமெரிக்கா ஒரு கூட்டு அங்கத்தினராக அதில்இருக்கிறது.

### இறுதிவரை போராடுவோம்

"இறுதி பாகிஸ்தானி உயிருடனிருக்கும் வரை போரிடுவோம்" என பூட்டோ கூறினார்.

கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் திரு. அப்துல் முனீம் கான் நேற்று எதிர்க்கட்சித் தலைவர்களைச்சந்தித்து காஷ்மீர் நிலைமைபற்றி விவாதித்தார்.

### துண்டித்தது

இந்தியாவுடனான சகல தந்தி, டெலிபோன், ரயில் சேவைகளை பாகிஸ்தான் இப்போது துண்டித்து விட்டது.

கிழக்குப் பாகிஸ்தானுடனான சகல ரயில், விமானப் போக்குவரத்துக்களும்நிறுத்தப்பட்டன.

படையிலிருந்து லீவில் சென்றுள்ள சகலரும் உடன் திரும்புமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள்.

# இந்தியப் பகுதிக்குள் பாகிஸ்தான் பாரசூட் துருப்புகள்

## 3 பாக். விமானங்கள் சுடப்பட்டன; லாகூரில் திட்டமிட்ட முன்னேற்றம்

### டில்லி, பஞ்சாபில் இருட்டடிப்பு

புதுடில்லி, செப். 7

**பாகிஸ்தான் விமானங்கள் இந்திய பஞ்சாபின் தலைநகரமான அமிர்தசரஸில் தாக்குதல் நடத்தின என்றும், இந்திய விமானப்படை விமானங்கள் அவற்றை இடைமறித்து மூன்று விமானங்களைச் சுட்டு வீழ்த்தின என்றும் அறிவிக்கப்பட்டது.**

**இதற்கிடையில் பதன்கோட், அம்பாலா, பாட்டியாலா ஆகிய மூன்று இடங்களில் பாகிஸ்தான் சிறிய அளவில் பாரசூட் துருப்புக்களை இறக்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.**

நான்கு கூட்டங்களாக இவை இறக்கப்பட்டன என்றும், எண்ணிக்கை தெரியவில்லை என்றும், இந்திய பாதுகாப்பு சாதனங்களைச் சேதப்படுத்து முகமாக பாகிஸ்தான் இந்நடவடிக்கையை எடுத்திருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

இவர்களைச் சுற்றி வளைக்கும் முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

### திட்டப்படி முன்னேற்றம்

இதற்கிடையில் லாகூர் அரங்கில் திட்டமிட்டபடி இந்தியா முன்னேறிவருவதாக அறிவிக்கப்பட்டது.

பூஞ்ச் பகுதியில் 3 புதிய காவல் நிலைகளை நேற்று இந்தியர்கள் கைப்பற்றினர்கள். 81 மில்லி மீட்டர் மோட்டார் பீரங்கிகள் இரண்டையும், மற்றும் பல ஆயுதங்களையும் அவர்கள் கைப்பற்றினர்.

சாம்-ஜௌரியா பகுதியில் இந்தியத் துருப்புக்கள் முன்னேறிவருவதாயும், 5பாகிஸ்தான் டாங்கிகள் அழிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

### சாஸ்திரி

பிரதமர் திரு. சாஸ்திரி விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இன்னும் கடுமையான சண்டையை எதிர்நோக்கியிருப்பதாயும், ஒவ்வொரு மட்டத்திலும் முழு சக்தியும் பாவிக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

எல்லா எல்லை ராஜ்யங்களும் நெருக்கடிக்கான ஆயத்தங்களைச் செய்ய வேண்டுமென்றும், எனினும் உடனடி அபாயம் டில்லி உட்பட வடக்கு ராஜ்யங்களுக்குத்தான் இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

நேற்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து சர்வகட்சித் தலைவர்களும் அரசாங்கத்திற்கு முழு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

### சிவில் பாதுகாப்பு

எல்லை ராஜ்யங்களில் சிவில் பாதுகாப்புக்களை மேற்கொள்ளுமாறு முதன் மந்திரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. உள்நாட்டுக்காவல் படையில் சேருமாறு இளைஞர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

### டில்லியில் இருட்டடிப்பு

நேற்று பஞ்சாப் நகரங்களிலும், பம்பாயிலும், டில்லியிலும் இருட்டடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

## வியட்னமுக்கு உதவ தபால் தலை

பெர்லின், செப். 7

சுதந்திரத்துக்காகப் போராடும் வியட்னும் மக்களுக்கு உதவுவதற்காக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தபால் அமைச்சு ஆகஸ்ட் 23ம் திகதி ஒரு விசேட தபால் தலையை வெளியிட்டது. அதன் விற்பனையில் கிடைக்கும் பணம் வியட்னும் உதவி நிதிக்கு வழங்கப்படும். "வியட்னுமுக்கு உதவுக" என்ற சொற்கள் அத்தபாற் தலையில் பொறிக்கப்பட்டுள்ளன.

## விநோபா ஜயந்திவிழா

யாழ்ப்பாணம், புதன்

ஆச்சார்ய விநோபாபாவேயின் 71-வது ஜயந்தி விழா வருகிற சனிக்கிழமை மாலை கொழும்பு தேஸ்டன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இலங்கை இந்திய தூதுவர் கலாநிதி பீம்சென்சச்சார் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

திருவாளர்கள் ச. சோமசுந்தரம், போகொட பிரேமரத்ன, க.இராமச்சந்திரன், முதலியார் செ. சின்னத்தம்பி உட்பட வேறுபலரும் இவ்விழாவில் உரைநிகழ்த்துவர்.

விநோபா அடிகளின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் விழாவின் இறுதியில் காண்பிக்கப்படும்.

## யுதாண்ட் இந்தியா, பாகிஸ்தானுக்கு விரைகிறார்

### இரு நாட்டு சண்டை பற்றி உலக தலைவர்கள் கவலை

நியூயோர்க், செப். 7

**ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் விரைந்தோடிவருகிறார். உடன் சண்டையை நிறுத்த முயற்சிக்கு முகமாகவே அவர் வருகிறார்.**

### பாதுகாப்புசபை

நேற்று காஷ்மீர் பற்றி ஆராயும் முகமாக பாதுகாப்புசபை இரு அவசரக் கூட்டங்களை நடத்தியது. சபைத் தலைவர் திரு. கோல்ட்பர்க் பேசியபோது உபகண்டத்தில் நிலைமை அபாயகரமாக விஸ்தரித்திருக்கிறதென்றும், 60 கோடி மக்களைக் கொண்ட நாடுகள் யுத்தத்திலீடுபட்டிருக்கின்றன என்றும் கூறினர்.

இரு நாட்டுப் பிரதிநிதிகளும் சபையில் பேச அழைக்கப்பட்டன.

இந்தியா ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகவும், பாகிஸ்தான் செண்டோவுதவியை நாடியிருப்பதாயும் பாகிஸ்தான் பிரதிநிதி கூறினர். இந்தியப் பிரதிநிதி இதை மறுத்தார்.

### சண்டையை நிறுத்துக

நேற்றைய பாதுகாப்பு சபை, சண்டையை நிறுத்த அவசியமான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளும்படி யுதாண்டைக் கேட்டுக் கொண்டது. சண்டையை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட இரு நாடுகளை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றையும் அது ஏகமனதாக நிறைவேற்றியது.

காஷ்மீரிலுள்ள ஐ. நா. பிரதம பார்வையாளர் ஜெனரல் நிம்மோவின் அறிக்கையை யுதாண்ட் சபையில் சமர்ப்பித்தார்.

### ஹிட்லர் முறை

அதையடுத்து பாகிஸ்தான் பிரதிநிதி பேசுகையில் ஐரோப்பாவில் ஹிட்லர் செய்ததையே, இன்று இந்தியா செய்கிறது.

### யுதாண்ட்

சபையில் யுதாண்ட் பேசுகையில் ஆகஸ்ட் 5-ம் திகதிக்கு முன் இருந்த நிலைக்கு இருபகுதி துருப்புக்களும் வாபஸாக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இருநாடுகளுக்கு மிடையே சண்டை விரிவடைந்து வருவதாயும், தீவிரமடைந்து வருவதாயும், சனிக்கிழமை சபை நிறைவேற்றிய யுத்த நிறுத்த தீர்மானத்துக்கு இருநாடுகளும் இன்னும் பதிலனுப்பவில்லை என்றும் யுதாண்ட் கூறினர்.

### ஊடுருவாளர் விலகவேண்டும்

இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங் யுதாண்ட்டுக்கு எழுதியிருக்கும் கடிதமொன்றை திரு. ஸி. எஸ். ஜா, சபையில் வாசித்துக் காட்டினர் ஊடுருவல் காரர்கள் காஷ்மீரிலிருந்து விலகவேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாதவரை சண்டை நிறுத்தம் சாத்தியமில்லை என அதில் கூறப்பட்டிருக்கிறது.

காஷ்மீரில் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்பதை ஒருபோதும் கை விடமாட்டோம் என பாகிஸ்தான் பிரதிநிதி சபையில் தெரிவித்தார்.



### வில்சன்

சண்டையை உடன் நிறுத்துமாறு பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் திரு. சாஸ்திரிக்கும், அதிபர் அயூபுக்கும் அவசரச்செய்திகள் அனுப்பியிருக்கிறார்.

### ஜோன்சன் கவலை

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் நிலைமை பற்றி ஆழ்ந்த கவலை அடைந்திருப்பதுடன், தொடர்ந்தும் கவனித்தும் வருகிறார்.

வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க், திரு. கோல்ட்பர்க் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தினர்.

### ரஷ்ய பிரதமருக்கு கடிதம்

ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜினுக்கு இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

இந்தோ - பாக்.

## விமான, கப்பல் சர்வீஸ் ரத்து

புதுடில்லி, செப். 7

இந்தியாபாகிஸ்தான்சண்டைநிலைகாரணமாகஇந்திய ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன் விமானங்கள் பாகிஸ்தான் வழியாகச் செல்லும் போக்கு வரத்துக்களை நிறுத்திக்கொண்டுவிட்டன. டில்லியிலிருந்து கராச்சிக்குச் செல்லும் விமானங்களும், பாகிஸ்தான் வழியாக மாஸ்கோ செல்லும் விமானப் போக்கு வரத்தும் ரத்துச் செய்யப்பட்டது. இதேபோல் இந்தியா வழியாகச் செல்வதையும் பாகிஸ்தான் சர்வதேச விமானப் போக்குவரத்து விமானங்கள் நிறுத்திக் கொண்டன. பாகிஸ்தான் துறைமுகங்களுக்கு இந்தியக்கப்பல்கள் செல்வதும் நிறுத்தப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை—சோவியத்

## நட்புறவுச் சங்கத்தின் வருடாந்தவிழா

குரும்பசிட்டி, செவ்.

இலங்கை — சோவியத் நட்புறவுசங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தவிழா இம்மாதம் 18-ம் திகதி சுன்னுகத்தில் நடைபெற விருக்கின்றது. சுன்னுகம் பட்டினசபை மண்டபத்தில் அன்றையதினம் காலையில் இலங்கை - சோவியத் நட்புறவாளர்களின் கலந்துரையாடல் முக்கிய நிகழ்ச்சியாக நடைபெறும். இரு நாடுகளுக்கிடையிலுமுள்ள கலாச்சாரஉறவுகள் மேலும் அபிவிருத்தியடையவும் விஸ்தரிக்கப்படவும் ஏற்ற ஒழுங்கு குறித்து அப்போது ஆராயப்படும். இதனையடுத்து மாலையில் சந்தை மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். சோவியத் திரைப்படம், தமிழ் கலாச்சாரகலைநிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், பொதுக் கூட்டத்தில் முக்கியநிகழ்ச்சிகளாக இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள சோவியத் தூதுவர் திரு. எல்.ஏ. கொரோபின் தமது பாரியாருடன் இவ்விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். இவருடன் இலங்கை — சோவியத் நட்புறவுசங்கத்தலைவரும் முல்கிரிகலை எம். பி. யுமான திரு. ஜோர்ச் ராஜபக்ஸா, உடுவில் எம். பி திரு. வி. தர்மலிங்கம், சுன்னுகம்பட்டினசபைத்தலைவர் திரு. பொ. நாகலிங்கம் ஆகியோரும் மேற்படி வருடாந்தவிழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவர்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

ஒன்றரை வருடகாலமாக வேலணை மத்திய கல்லூரியில் கடமையாற்றிய திரு. ஏ. சோமாஸ்கந்தர் காரைநகர் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

## கி. மு. சங்கத்தினரின் சிரமதான இயக்கம்

சாவகச்சேரி, செவ்

கெற்பேலி கிராமத்தில் ஒருமைல் நீளமான புது வீதியொன்று கெற்பேலி கிராமமுன்னேற்றச் சங்கத் தொண்டர்களால் சென்ற சனிக் கிழமைசிரமதானஇயக்கம்மூலம் அமைக்கப்பட்டது. இந்த இயக்கத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் கலந்துகொண்டு மரம் ஒன்றைத் தறித்து சிரமானத்தை ஆரம்பித்து வைத்தார்.

கெற்பேலி கி. மு. ச. மண்டபத்தில் அன்று மாலை சிரமதான வரவேற்புக்கூட்டம் மேற்படி சங்கத்தலைவர் திரு. இராசரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது;

"பின்தங்கிய நிலையில் உள்ள ஒரு கிராமம் முன்மாதிரியான கிராமம் ஆவதற்கு கிராமமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக இப்படியான சிரமதான ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டும். இந்த கிராமத்து முக்கிய தேவைகளான மருந்துச்சாலை, கைத்தொழில் நிலையம் போன்றவற்றை விரைவில் பூர்த்தி செய்ய ஏற்ற நடவடிக்கைகளைமேற்கொள்வேன்."

## பாடசாலைகளில் பால்

பம்பலப்பிட்டி, திங்கள்

சகல பாடசாலைகளிலும் பால் விநியோக நிலையங்களை ஆரம்பித்து அங்கு பயிலும் மாணவர்களுக்குப் போதியளவு பால் விநியோகிக்க பால்சபை தீர்மானித்துள்ளது. கல்வி இலாகாவின் வேண்டுகோளுக்கிணங்கவே இவ்வித ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

பாடசாலைகளில் ஒரு போத்தல் பால் 20 சதத்துக்கு விநியோகிக்கப்படவிருக்கிறது.

## கொழும்பில் பாரதிவிழா

பம்பலப்பிட்டி, செவ்.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள தமிழ்இலக்கியமன்றம், வருகிறவெள்ளிக்கிழமை வெள்ளவத்தை சைவமங்கையர் கழகமண்டபத்தில் 'பாரதி விழா'வைக் கொண்டாடவிருக்கிறது. இவ்விழாவில் கவியரங்கம், கருத்தரங்கம், இன்னிசைக்கச்சேரி, சிறப்புச் சொற்பொழிவு ஆகியன இடம்பெறவிருக்கின்றன.

"பாரதி ஒரு இந்தியத் தேசியவாதியா? அன்றி தமிழின எழுச்சிவாதியா" எனுந் தலைப்பில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் திருவாளர்கள் எஸ். பொன்னுத்துரை, க. நவசோதி, பொ. சிவப்பிரகாசம், ஈழவேந்தன், யோகா வல்லிபுரம் சற்சொரூபவதிநாதன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். புலவர் கருணலய பாண்டியனுர் கருத்தரங்கத்திற்குத் தலைமைவகிக்கின்றார். "பாரதியைக் கண்டேன்" எனுந்தலைப்பில் நிகழும் கவியரங்கில் கவிஞர்கள் மஹாகவி, தான்தோன்றிக் கவிராயர், முருகையன், மு. பொன்னம்பலம், பா. சத்தியசீலன், த. குமாரதாசன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். கவியரங்கத்திற்கு இலங்கை வானெலியைச் சேர்ந்த நாவற்குழியூர் நடராஜன் தலைமைவகிக்கின்றார். செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினத்தின் இன்னிசைக்கச்சேரியுடன், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரையின் சிறப்புச் சொற்பொழிவும் விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

## வல்லிபுர ஆலய உற்சவ ஏற்பாடுகள்

பருத்தித்துறை, செவ்.

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவகால ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை செய்யும்பொருட்டு கச்சேரியைச்சேர்ந்த காரியாதிகாரி திரு. டபிள்யு. செல்வரத்தினம் தலைமையில் மகாநாடொன்று நடைபெற்றது.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு, ஏ. சி. விசுவநாதன். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வி. ஜீவநாயகம், பொலிஸ் அதிகாரி திரு. இராசேஸ்வரன் உட்பட பல பிரமுகர்களும் கோவில் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

முதலுதவிச் சேவை நிலையம், சுகாதார நிலையம், நகர்காவலர் நிலையம், தொண்டர், சாரணர் நிலையம் முதலானவைகளை அமைப்பதுடன் உற்சவ காலத்தில் நாளாந்தசேவைகள் பாதிக்கப்படாத முறையில் இ. போ. ச.வின் பஸ் சேவையையும் விஸ்தரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## நாடகம்

ஊர்காவற்றுறை, செவ்

சரவணை பாரதி சனசமூகநிலைய கட்டிட நிதிக்காக சென்ற சனிக்கிழமை இரவு 'தர்மாவின் நம்பிக்கை' என்ற நாடகத்தை வல்லை கலைமகள் நாடகமன்றத்தினர் நடித்துக் காண்பித்தனர்.

## "உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியைப்பெருக்குக"

துணுக்காய், திங்கள்

"எமது நாட்டுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களுக்கும் பிற நாடுகளையே எதிர்பார்த்து வாழ்ந்தால் நமது பொருளாதாரம் வளராது. நமது நாட்டில் உண்டாக்கக் கூடிய பொருள்கள் அத்தனையையும் உண்டாக்க வேண்டும். அப்படி உண்டாக்கியே தீருவோம் என்று நாம் திடசங்கற்பம் பூணவேண்டும். உபஉணவுப் பொருள்களாகிய வெங்காயம், மிளகாய் போன்றவற்றிற்காகப் பெருந்தொகைப் பணத்தை பிறநாடுகளுக்கு நாம் கொடுக்கிறோம். இந்நிலை மாறவேண்டும். இந்தப் பொருள்கள் எல்லாவற்றையும்எமது நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டும். அப்பொழுது தான் நமது செல்வம் வளரும்" இவ்வாறு கல்விளாங்குளம் அரசினர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கல்விளான் கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் துணுக்காய் காரியாதிகாரி திரு மா. இராசரத்தினம் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.



## புதிய சமாதான நீதவான்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீர்வேலியூர் திரு. க. வே. கனகரத்தினம் புதிய சமாதானநீதவானுக இன்று யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் தமிழில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார்.

## முன்னுள் நீதிபதி கோரிக்கை

பதுளை, திங்கள்

இங்குள்ள பல்வேறு சமூகத்தவர்களிடம் காணப்பட்ட ஒற்றுமையின் காரணமாகவே மார்க்ஸிஸம் இந்த நாட்டில் வளர்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் பல சமூகத்தினரும் ஒன்று சேர்ந்து கம்யூனிஸம் இந் நாட்டில் தலைதூக்காது செய்ய வேண்டும் என்று முன்னுள் பிரதம நீதியரசர் திரு. கேமா பஸநாயநகா பௌத்தசமயக் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.


REGAL—JAFFNA
NOW SHOWING!
Robert Mitchum
in
TWO FOR THE SEE SAW !!
(Panavision)

இப்பொழுது திரையிடப்படுகிறது !

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்

கைகொடுத்த தெய்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)

ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சாராதவனையே மிருகமாக்கத் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான் — "நானும் மனிதன்தான்"

விஜயபுரி வீரன் புகழ் ஆனந்தன்-சந்திரகாந்தா
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்
ஆனந்த மூவிஸ்

நானும் மனிதன்தான்






மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
Agents :
PHONE : 397 ROYAL DISPENSARY JAFFNA


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

**கைத்தறி நெசவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்**

நீங்கள் தயார் செய்யும் எல்லாவித கைத்தறி தினுசுகளையும் நிதானமான விலைகளில் விற்பனைசெய்ய சந்தர்ப்பம் தருகிறோம். உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்,
போன்: 296,

### அறிவித்தல்
**தேர்த் திருவிழா**

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் 9-9-65 வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் தேரில் சுவாமி எழுந்தருளுவார். அன்றிரவு சண்முக அர்ச்சனை நடைபெறும்.

ச. வே. சண்முகம்பிள்ளை
344 உபயகாரர்.





### கொழும்பு
**புதன் 8-9-65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 படப்பாட்டுக்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கவிதை மஞ்சரி - 2.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு, 7-30 விரிவுரை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 படப்பாட்டுக்கள், 9-30 நேயர் கேட்டவை, 10-00 தேர்ந்த இசை.

### திருச்சி
**புதன் 8-9-65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, மாலை 6-05 இரவு 7-15)

319.1 மீ (940 கி. சை.)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக்கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 12-40ஒன்பதாம் வகுப்பிற்கு, 1-00 பெண்ணுலகம் 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-00 கே. எஸ். நாராயணன் வீணை, 5-30 கோடீஸ்வரய்யர் — பாடல்கள்.

இரவு 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 இசைப் பயிற்சி, 6-35 மெல்லிசை, 6-40 பொதுநோக்கு, 6-45 கன்னேட்டம், 7-00 இம்ம துப்பாடல், 7-15 பொன்ஞெளிர் பாரதம், 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 தென்றலும் புயலும், 8-15 நமது கடமை, 8-20 திரைப் படஇசை, 9-15 இசை மாலை, 9-45 வாத்திய இசை, 10-00 திருமுறை தமிழ் இசை.




## சனசமூகநிலைய விளையாட்டுப்போட்டி

சுழிபுரம், செவ்வாய்

மாதகல் சனசமூகநிலையத்தினரின் விளையாட்டுப் போட்டி நிலைய முன்றலில் நடைபெற்றது. போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு சங்கத் தலைவர் பி, கந்தஞானி பரிசில்கள் வழங்கினர். போட்டியின் சில முடிவுகள் வருமாறு:

50 யார் ஓட்டம்- பாலர் பிரிவு: மா விநாயகராசா, த குணசிங்கம்.

சங்கீதக்கதிரை- ச தனராசா, இ தருமராசா.

100 யார் ஓட்டம்- கீழ்ப் பிரிவு: ஐ சிவஞானம், இ. இராசன்.

பாண் உண்ணுதல்- எ மகேந்திரராசா, சிவேதநாயகம்.

பலூன் ஊதி உடைத்தல்- கே கருணையானந்தன், இ கந்தசாமி.

220 யார் ஓட்டம்- பி யேசுநாயகம், ஐ சிவஞானம்,

கணக்குப்போட்டி- எம், மரியயோசவ், செ ஸ்ரீகந்தராசா,

100 யார் ஓட்டம்- மத்தியபிரிவு: இ பிலிப், ரி சுப்பிரமணியம்,

பாட்மின்டன்

### மத்தியகல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். மத்தியகல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடந்த பாட்மின்டன் போட்டியில் யாழ். மத்தியகல்லூரி3-2கோலால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டி அகில வடமாகாண பாட்மின்டன் குழுவினரால் நடாத்தப்பட்டது.

## மட்டக்களப்பில் கலை விழா
### சனசமூக நிலைய சம்மேளன ஆதரவில் நடைபெற்றது

மட்டக்களப்பு, செவ்.

கிழக்கிலங்கை சனசமூக நிலைய சம்மேளன மட்டக்களப்புக் கூட்டணியின் கலைவிழா மட்டக்களப்பு நகர மண்டபத்திலும், மெதடிஸ் மத்திய கல்லூரி மண்டபத்திலும் கடந்த நான்காம் திகதி நடைபெற்றது.

நகர மண்டபத்தில் கிராமிய பாடல், நாட்டுக்கூத்து, யோகாசனப் பயிற்சி ஆகிய போட்டிகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ. ஏ.யோசப் தலைமையிலும், அதேநேரத்தில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு கா. நடராசா தலைமையில் பேச்சுப் போட்டியும் நடைபெற்றது.

மட்டக்களப்பு நகர பிதா திரு ஜே. எஸ். திசவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற மாலை நிகழ்ச்சிகளில் பாட்டு, வாத்திய இசை, கிராமிய நடனம், நடனம், நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

போட்டி முடிவுகள்:

பேச்சுப்போட்டியில் எஸ். கமலாரஞ்சிதம், முதலாமிடத்தையும், க. கதிரவேலுப் பிள்ளை இரண்டாமிடத்தையும், எஸ்.இஸ்மாலெவ்வை மூன்றும்இடத்தையும், பெற்றனர்.

கனிஷ்டபிரிவில்;

க. நல்லரெத்தினம் முதலாமிடத்தையும், க. சந்திரகுமாரி இரண்டாமிடத்தையும், வி.விபுலானந்த முதலியார் மூன்றும்இடத்தையும், பெற்றனர். யோகாசனப் பயிற்சியில் திரு ந. கோவிந்தசாமி முதலிடத்தையும், நாட்டுக்கூத்தில் திரு செ. முத்துலிங்கம் முதலிடத்தையும் பெற்றனர்.

திருமதி திசவீசிங்ரகம் பரிசில்களை வழங்கினர். சனசமூக நிலைய கூட்டணியின் செயலாளர் திரு மு. ஆனந்தராஜன் போட்டிக்குரிய ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

### மறைவுக்கு அனுதாபம்

கோப்பாய், செவ்.

அமரர் சேர் கந்தையா வைத்தியநாதன் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கூட்டமொன்று சென்ற வியாழக்கிழமை கோப்பாய் கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் க. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் சர். வைத்தியநாதன் அகிலஇலங்கைக்கும் சைவஉலகத்திற்கும் பெருந்தொண்டாற்றினுர் என்றும் அவரால் ஆறுமுக நாவலர் பெருமான் கண்ட திருக்கேதீச்சரக் கனவு நனவாக்கப்பட்ட தென்றும் சொன்னுர்.

கூட்டத்தில் சர். வைத்தியநாதனின் ஆன்ம சாந்திக்காகப் இரு நிமிடங்கள் பிரார்த்திக்கப்பட்டது.

''கோப்பாயின் தவப் புதல்வரும் சைவப்பெரியாரும் அரசியல் ஞானியுமாகிய சேர். கந்தையா வைத்தியநாதன் மறைவு குறித்து கோப்பாய் மக்கள் சார்பில் இன்று கூடிய பொதுக்கூட்டம் தமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது,''

''அமரர் கந்தையா வைத்தியநாதன் அவர்களது உருவப்படத்தை கோப்பாய் வடக்குக் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் திரைநீக்கம்செய்து வைத்தற்காவன வேண்டும். ன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன,

### ஏலத்தில் கார்விற்பனை

பம்பலப்பிட்டி, திங்கள்

அரசாங்க களஞ்சியப் பகுதியினர், ஸ்தானிகர் காரியாலயங்களிலிருந்து வாங்கிய 15 கார்களை பொது கேள்விப்பத்திரம்மூலம் விற்பனைக்கு விடுவார்கள் எனத் தெரியவருகிறது. தற்பொழுது ஏலத்தில் விற்கப்படவிருக்கும் கார்கள் நடுத்தரமான கார்கள் எனக் கூறப்படுகிறது. முதலாவது கார் விற்பனையில் அரசாங்கம் ... முறை 90,000 ரூபா லாபத்தைப் பெற்றது.


## வரி விளம்பரம்

**தேவை**

நெசவு 'பாவு' ஓடி 'வீம்' பண்ணக்கூடிய அனுபவம் உள்ள ஆசிரியர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும். சண்முகானந்த ரெக்ஸ்ரைல்ஸ், 58, பெரிய கடை, யாழ்ப்பாணம். 1001

ஒற்றை அல்லது இரணைக் குழல் தோட்டாத்துப்பாக்கி தேவை. விபரங்கள் அறிவிக்கவும், L. C. இரத்தினம், தேவாலய வீதி, சங்கானை. 1000

**அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகவிஞ்ஞாபனம்**

புளியங்குளம் புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் கோவில் புராதனமாய் உள்ள அவ்வாலயத்தை புதிதாய் திருப்பணி வேலைகள் செய்து நிகழும் விசுவாவசு வருடம் ஆவணி மாதம் (8-9-65) 23-ம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வரும் சிம்மலக்கினத்தில் ஸ்ரீநாகதம்பிரானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதால் அன்பர்கள் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று ஸ்ரீநாகதம்பிரானின் திருவருளைப் பெறுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இங்ஙனம் கோவில் பரம்பரை பூசகர், ஆ. வல்லிபுரம், இ. குமரையா, த. ராசையா, கா. பரராசசிங்கம். 981

**கல்வி**

(ஆங்கிலம்/ தமிழ்) கலை/ விஞ்ஞானம் / வர்த்தகம் ஆகியவற்றில் ஜி. சி. ஈ. (உயர்தர/சாதாரண) பரீட்சைக்கு, மார்கழி/ஆவணியில் தோற்றுபவர்களுக்கு 1 வருட, 6 மாத, 3 மாத, தையல், சிங்கள (காலை, மாலை) வகுப்புக்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவமுள்ள இலண்டன், இந்திய, இலங்கைப் பட்டதாரிகளால், 40 வருடத்திற்குமேல் அனுபவமுள்ள வர்த்தக ஆசிரியராலும் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. வர்த்தகக் கல்லூரி,(ஸ்தாபிதம் 1924) பருத்தித்துறை. 986

ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தி பெறவேண்டுமானுல் எங்கள் காலை / மாலை வகுப்புகளில் சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர். 998

**விற்பனைக்கு**

நல்ல நிலைமையிலுள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரம் (றெமிங்ரன்) விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு:- சாமி அன் சன்ஸ், 119/3, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 999

மானிப்பாய் சங்குவேலியில் பிள்ளையார் கோவிலுக்கும் உடுவில் பெண்கள் கல்லூரிக்கும் இடைத் தூரத்திலுள்ள 8 1/2 பரப்புக் காணியும் பழைய வீடும் விற்பனைக்குண்டு. காணியில் பயன் தரும் பனை, தென்னை, புளி முதலிய மரங்கள் உண்டு, மற்றைய விபரங்களுக்கு விளம்பர இல: 996, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 996

E L வரிசை Hillman Minx நல்ல நிலைமையிலுள்ளது, சொந்தப் பாவிப்பு. நாவலர் ரோட், 316-ம் இலக்கத்தில் தொடர்பு கொள்க. 995

சகல விதமான மின்சார உபகரணங்களும், தண்ணீர் பம்புகளும், இங்கிலீஸ் பல்புகளும் விற்பனைக்குண்டு. 67, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். 1003

**LOANS**

Loans on cars, cycles radios sewing machines etc. Reasonable interest - apply giving full details of articles. applications treated strictly confidential Advt. Box No. 1002, C/o Eelanadu Jaffna 1002

**EDUCATION**

Book keeping and English will be taught by London Diploma Holders at The College of Accountancy, 278, Kankesanthurai Road Jaffna. 1004


### 'புதுஉலகம்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், புதன்

அண்மையில் காலஞ்சென்ற ஆசிரியர் பசுபதியின் கவிதைத் தொகுதியான 'புதுஉலகம்' வெளியீட்டு விழா வருகிற சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் சேணிய தெரு அரசினர் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது. கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

பருத்தித்துறை எம். பி. திரு, க. துரைரத்தினம் நூலை வெளியிட்டு வைப்பார். திரு. கா. சிவத்தம்பி சிறப்புரை நிகழ்த்துவார். திரு. சொக்கன் நூலை அறிமுகம் செய்துவைப்பார்.

திருவாளர்கள் இளங்கீரன் பிரேம்ஜி, செ. யோகநாதன், டாக்டர் நந்தி ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

### இன்று செல்வச்சந்நிதி நிகழ்ச்சிகள்

வல்வெட்டித்துறை, செவ்

பகல் உற்சவம்-விமானம்.

இரவுஉற்சவம்-இடபவாகனத்தில் வலம் வருதல்.

இசையரங்கு: வயலின்- திரு. வைத்தீஸ்வர ஐயர்- மிருதங்கம்- திரு. எம். என். செல்லத்துரை.

கதாப்பிரசங்கம்: ''செங்லோச்சிய சிங்காரவேலன்''- திருமதி கமலா பெரியதம்பி, கிழவிக்கருளிய குழந்தைக் கந்தன்-ஸ்ரீ எஸ். விஞசித்தம்பி.

### இடமாற்றம்

மட்டக்களப்பு, செவ்.

மட்டக்களப்பு அரசினர் கல்லூரிக்கு ஏ. ஜே. சபாரத்தினம் அதிபராகவும், திரு. யு. எம். சர்மா தேகப் பயிற்சி ஆசிரியராகவும், நியமனம் பெற்றுள்ளனர். மேற்படி பாடசாலையின் அதிபர் திரு. சிவசிதம்பரம் வேறு பாடசாலைக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

ஊர்காவற்றுறை, செவ்

வேலணை மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. ஏ. ரி. சபாரத்தினம் மட்டக்களப்பு அரசினர் கல்லூரிக்கு இத்தவணை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கடந்த ஆறு வருடங்களாக மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. சிவசிதம்பரம் வேலணை மத்திய மகாவித்தியாலய அதிபராக நியமனம் பெற்றுள்ளார். புதிய அதிபர் திரு சிவசிதம்பரம் இன்னும் தமது பதவியை ஏற்கவில்லை எனவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் பரவுகிறது

# லாகூரில் இந்திய படைகள் நுழைந்தன

## மேற்கு பாகிஸ்தானில் பன்முறை இந்திய விமானங்கள் குண்டுமாரி

### ராணுவ நிலைகள் நாசம்; ரயில்கள் நாசம்

புதுடில்லி, செப். 6

இந்தியத் துருப்புக்கள் மேற்குப் பாகிஸதான் எல்லையைக் கடந்து லாகூரில் பிரவேசித்திருப்பதாயும், தொடர்ந்து முன்னேறிவருவதாய்ம் அறிவிக்கப்பட்டது. பஞ்சாப் எல்லையைக் கடந்து மேற்குப் பாகிஸதானில் நுழைந்த இந்தியவிமானப்படைவிமானங்கள் இன்று ஒரு பெட்ரோல் ரயில்வண்டி, ஒரு சாமான் ரயில், ஒரு ராணுவ வாகனக்கூட்டம், ஒரு பீரங்கிநிலை ஆகியவற்றின்மீது குண்டுமாரி பொழிந்து பலத்த சேதத்தை விளைவித்தன. பெட்ரோல் ரயில் வண்டியும், ராணுவ முகாமும் தீப்பற்றி எரிந்தன.

### சாம்ப் நிலைமை

சாம்ப், ஜௌரியா பகுதிகளில் இன்று இந்திய விமானங்கள் பலமுறை குண்டுமாபொழிந்து 5 டாங்கிகளையும், 2 அதிகனரக பீரங்கிகளையும், 10 பீரங்கிகளையும், பல கவச வண்டிகளையும் அழித்துவிட்டு நிலையத்துக்குப் பத்திரமாகத் திரும்பிவந்துசேர்ந்தன.

### ஜௌரியானில் முன்னேற்றம்

ஜௌரியான் பகுதியில் பாகிஸ்தானின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டு, இந்தியத் துருப்புகள் முன்னேற ஆரம்பித்துவிட்டன. ஏராளமான வாகனங்களையும், சாதனங்களையும் இந்தியர்கள் கைப்பற்றினர்கள்.

### பூஞ்சில் ஒரு நிலை பிடிபட்டது

பூஞ்ச் பகுதியில் மிக முக்கியமான பாகிஸ்தான் ராணுவ கேந்திரமான ஒரு குன்றை இந்தியத் துருப்பினர் கைப்பற்றியிருக்கிறார்கள். எல்லைக்கோட்டுக்கு ஒன்றரை மைலுக்கப்பால் இந்நிலை இருக்கிறது.

### பலமுறை தாக்குதல்

மேற்குப் பாகிஸ்தானில் பலமுறை இந்திய விமானங்கள் இன்று தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. லாகூர் பகுதியில் இந்தியத் துருப்புகள் எல்லையைக் கடந்துவிட்டதாக பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் அறிவித்தார்.

### சீன குற்றச்சாட்டு

இதற்கிடையில் திபேத் சிக்கிம் எல்லையில் சீனப்பிரதேசத்திற்குள் இந்தியத் துருப்புகள்ஊடுருவியதாக சீன குற்றம்சாட்டியிருக்கிறது. ராணுவ நிலையங்கள் அமைப்பதாயும் அது கூறியிருக்கிறது. இந்தியா இதை மறுத்திருக்கிறது.

இன்று சென்னையில் பாகிஸ்தான் உளவாளி ஒருவர் கைதுசெய்யப்பட்டார். புறநகர் பகுதியில் ராணு. அமைப்புக்கருகில் இவர் சந்தேகமான முறையில் உலவினர் என்றும், இவரது தந்தை பாகிஸ்தானில் ஒரு தபால் சிப்பந்தி என்றும் கூறப்பட்டது.

## "10 கோடி பாகிஸ்தானியருக்கு இது சோதனைக்காலம்"

### அயூப் எச்சரிக்கை

ராவல்பிண்டி, செப். 6

10 கோடி பாகிஸதான் மக்களுக்கு சோதனைக்காலம் ஆரம்பித்திருப்பதாயும், கடந்த 5 மாதங்களாகத் திட்டமிட்டு இந்தியா படையெடுப்பு நடத்தியிருப்பதாயும் அதிபர் அயூப்கான் அறிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் இன்று பகல் விடுத்த ஒரு செய்தியில், பாகிஸ்தான் யுத்தத்தில் இறங்கிவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

"பாகிஸ்தானில் நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்தியத் தாக்குதல் களிலிருந்து பாகிஸ்தான் மக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக புதிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறோம்" என்றும் அதிபர் அயூப்கான் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

"ஜம்மு-காஷ்மீரில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு நாம் சிறிதும் பொறுப்பல்ல. இந்தியப் படைகள் போர் நிறுத்தக் கோட்டைக் கடந்த பின்னரே நமது படைகள் அவர்களைத் தாக்க வேண்டியநிலை ஏற்பட்டது. பாகிஸ்தானைப் பிடித்துக் கொள்ள இந்தியா முயற்சிக்கிறது. 'ஆனால் வெளி உலகுக்கு, தான் ஒரு சமாதான நாடென இந்தியா அறிவிக்கிறது. இந்தியாவின் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் பணியமாட்டாது. போர்நிறுத்தக் கோட்டைக் கடந்து எம எல்லைக்குள் இந்தியா பல நிலைகளை ஸ்தாபித்துள்ளது. சில பகுதிகளில் இன்னும் தாக்குதல்கள் நடத்திவருகிறது. நாம் எதற்கும் பணியமாட்டோம்" என்றும் அயூப்கான் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்

### லீவுகள் ரத்து

பாகிஸ்தானியர் முப்படைகளினதும் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன பல அவசரச்சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்[illegible]

## இலங்கையின் காஷ்மீர் கருத்து

### இவ்வாரம்வெளியாகும்

பம்பலப்பிட்டி, திங்கள்

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இலங்கையின் உத்தியோக பூர்வமான கருத்து இவ்வார இறுதியில் வெளியிடப்படலாம் எனத்தெரிய வருகிறது. இலங்கையின் இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்திலிருந்தும் கராச்சியிலுள்ள இலங்கையின் பாகிஸ்தானிய காரியாலயத்திலிருந்தும் வரும் அறிக்கைகளைத் தற்பொழுது இலங்கை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது.

---

## மாணவர்களின் இரத்ததானம்

குரும்பசிட்டி, திங்கள்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்த வங்கிப் பிரிவினர் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்தனர். அப்போது ஆசிரியர்கள் உட்பட பெருந்தொகையான மாணவர்கள் இரத்ததானம் செய்தனர். கல்லூரி மாணவர்கள் மத்தியில் டாக்டர் ஏ.ஜோசெப் இரத்ததானம் அளிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றியும் தவறான கருத்துக்கள் இடம் பெறவாய்ப்பளிக்கக்கூடாதெனவும் வலியுறுத்தினர்.

## சகல புகையிரதங்களிலும் மதுவிற்பனை ஒழிக்கப்படும்

### உள்நாட்டு மந்திரி அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

நாட்டில் மதுவிலக்கைஅரசாங்கம் கொள்கையளவில் ஒத்துக்கொள்வதாயும், இது பற்றித் தாம் மந்திரி சபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்திருப்பதாயும்உள்நாட்டு மந்திரி டாக்டர் தஹநாயக்கா பார்லிமெண்டில் பேசியபோது குறிப்பிட்டார்.

மந்திரிசபையின்முடிவைப் பொறுத்து அது அமுலாகும் என்றும் அவர் கூறினர்.

இவ்விஷயத்தில் உள்நாட்டுக் குடிவகைகளுக்கும், வெளிநாட்டுக் குடிவகைகளுக்குமிடையே வித்தியாசம் காட்டப்படமாட்டாது என்றும் அவர் தொடர்ந்து கூறினர்.

எல்லாப் புகையிரதவண்டிகளிலும் மதுவிற்பனையை ஒழிக்கத் தீர்மானித்திருப்பதாயும், இனி புகையிரதங்களில் மதுவிற்பனைக்கு லைசென்ஸ் வழங்கப்படமாட்டாதென்றும் அவர் கூறினர்.

வடபகுதி எம். பி.க்களின் வேண்டுகோள்மீது தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதென்றும், செப்டம்பர் 30ந் தேதிக்குப் பின் லைசென்ஸ்வழங்கப்படமாட்டாதென்றும் தொடர்ந்து அவர் கூறினர்.

### கிராமசேவகர்கள நலன்

நாட்டிலுள்ள 3,600 கிராமசேவகர்களின் குறைபாடுகளை நிவர்த்திசெய்யத் திட்டம் ஒன்றைத் தாம் மந்திரிசபைக்குச் சமர்ப்பித்திருப்பதாயும், அவர்களுக்குச் சம்பள உயர்வு, வீட்டு வசதி, காரியாலய வசதி, 10 வருட சேவைக்குப்பின் ஒய்வு பெறுபவர்களுக்கு நஷ்டஈடு ஆகியன அடங்கியிருப்பதாயும் அவர் கூறினர்.

---

## ராஜாஜி மறுப்பு

சென்னை, செப், 6

காஷ்மீர்பற்றி ஆலோசனை நடத்துமுகமாக புதுடில்லி வருமாறு பிரதம மந்திரி தம்மை அழைத்ததாயும், தம்மால் அங்கு செல்ல முடியாதெனத் தெரிவித்துவிட்டதாயும் ராஜாஜி இன்று கூறினர். காஷ்மீர்பற்றிய தமது அபிப்பிராயத்தை கடிதம்மூலம் தாம் பிரதமருக்குத் தெரிவித்திருப்பதாயும் அவர் கூறினர்.

---

## கருத்தரங்கு

சுழிபுரம், திங்கள்

யாழ் மறுமலர்ச்சி மன்றத்தினரின் ஆதரவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. கருத்தரங்குக்கு கலையரசு எஸ். சொர்ணலிங்கம் தலைமை வகித்தார்

---

## பச்சிலைப்பள்ளியில் சகாய வேலை

பளை, செவ்.

பச்சிலைப்பள்ளிப்பகுதியின் சகாய வேலைகளில் கிராம விருத்தியதிகாரி திரு. ஜே. எஸ். பிரடெரிக் தலைமையில் சுமார் 150பேர் கலந்து கொண்டனர். முகாவில் பாடசாலை ரோட், மாசார்-முகாவில் மாசார் வீதி, செம்பியன்பற்று புளியடி வாய்க்கால், மருதங்கேணி பிள்ளையார் கோவில் வாய்க்கால் ஆகிய இடங்களில் சுமார் 150 பேரது உதவியுடன் சகாய வேலைகள் மிகத்துரிதமுடன் நடைபெற்றுவருகின்றன. பெரும்பாலும் இம்மாத முடிவுக்குள் வேலைகள் பூர்த்தியடையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஸாம்பியா சென்றார்

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலையைச் சேர்ந்தவரும் மாவட்ட நீதிபதி, அஸைஸ் கமிஷனர் பதவிகளை வகித்தவருமான திரு. என். கிருஷ்ணதாஸின் புதல்வரான திரு வி. கிருஷ்ணதாஸன் வடரொடீஷியாவில் வெளிவிவகார இலாகா அதிபர் பதவியை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு ஸாம்பியா நாட்டிற்கு சென்றுள்ளார்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சிவ வேஜன்வெர்ஜரின்கீழ் 'சர்வதேச சமூகசட்ட ஒற்றுமை' பற்றி ஆராய்ச்சிகள் நடத்திய இவர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஓ. காநெல் என்பவரின் கீழும் சிலகாலம்பணியாற்றினர்.

---

கிளிநொச்சியில்

## மக்கள் வங்கியின் புதிய கிளை

குரும்பசிட்டி, செவ்.

கிளிநொச்சித் தொகுதியில் மக்கள் வங்கியின் கிளை ஒன்று மிகவிரைவில் திறக்கப்பட இருக்கின்றது. கிளையினை நிறுவுவதற்கு ஏற்ற கட்டிடம் ஒன்றினைத் தெரிவு செய்வதில் தற்போது கவனம் செலுத்தப்படுகிறது. வர்த்தக கூட்டுறவு மந்திரி நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேலும் 14 புதிய மக்கள் வங்கிக் கிளை ஸ்தாபனங்களை நிறுவ முடிவு செய்துள்ளார். கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. கா, பொ. இரத்தினம் மக்கள் வங்கிக் கிளை ஒன்று கிளிநொச்சித் தொகுதியில் நிறுவப்படவேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாத 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org